1987 ஏப்ரல் 1]

வடஆற்காட்டை பொறுத்தவரையில் பாலாற்றிலிருந்து வருகிற குடிதண்ணீர் முழுவதும் பாதிக்கப்பட்டு, குடிதண்ணீர் கூடகெட்டுப் போய் மக்கள் பெரும் தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள். எனவே அந்த மாவட்டத்தில் இருக்கிற தோல் பதனிடும் தொழில் அதிபர்கள் சீக்கிரமாக முன் வந்து ஒரு பரிகாரம் தேடாவிட்டால் அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்று இந்த நேரத்திலே நான் எச்சரிக்கிறேன்.

குமரி மாவட்டத்தில் புதிய தொழிற்சாலை அமைத்தல்.

239—(*வினா எண் 6532எ) டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் புதிதாக கயிறு தொழிற் சாலையோ, மரவள்ளிக்கிழங்கை கச்சாப் பொருளாகக் கொண்ட தொழிற்சாலையோ அமைக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசிற்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் புதியதாக தொழிற் சாலை வருமா என்று கேட்டாலே இல்லை என்ற பதில் வரும் என்பது எனக்குத் தெரிந்ததுதான். இருந்தாலும் அந்த மாவட்டத்தில் பெரும் தலைவர் காமராஜர் ஆட்சிக்குப் பின்னர் தொழிற்சாலைகளே ஆரம்பிக்காத காரணத்தால் அங்கே ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து வைத்தது இந்த அரசு என்னும் பெருமையை உரிமையாக்கவாவது நீங்கள் ஆரம்பித்து தர முன் வருவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இல்லை என்று சொல்கிறபோதே எதை அடிப்படையாக வைத்துச் சொல்லுகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஏற்கெனவே 14 கயிறு தொழிற்சாலைகள் அங்கே கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக அமைக்கப்பட்டு நடந்துக் கொண்டிருக்கின்றன. எனவே இதை எல்லாம் கருத்திலே வைத்துத்தான் அதற்கு மேலே அங்கே அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று நாங்கள் தெரிவித்திருக் கிறோம். அடுத்து இன்னொன்றும் கேட்டார்கள். புதியதாக கயிறு தொழிற்சாலையோ அல்லது மரவள்ளிக் கிழங்கு தொழிற் சாலையோ கேட்டிருந்தார்கள். மர வள்ளிக்கிழங்கு சம்பந்தமாக அங்கே ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகளும் சாத்தியக்கூறுகளும் இல்லை என்ற காரணத்தினால்தான் இல்லை என்று சொல்லப் பட்டிருக்கிறது.

[1987 ஏப்ரல் 1

டாக்டர். தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கயிறு தொழிற்சாலைகளைப் பொறுத்தவரைக்கும் 14 கூட்டுறவுத் தொழிற்சாலைகள் இருப்பதாகச் சொன்னார்கள். கூட்டுறவுத் தொழிற்சாலை இருந்தாலும் நாங்கள் கேட்பதெல்லாம் அரசு சார்பில் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற ஆதங்கத்தில் தான் தெரிவித்தோம். எனவே அதை கருத்தில் கொண்டு செயல்படவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு மரவள்ளிக் கிழங்கைப் பொறுத்தவரைக்கும் அங்கே இருந்து சேலத்திற்கு கூட கச்சாப்பொருளாக வாங்கிச் செல்லுகிறார்கள். அந்த அளவுக்கு செழிப்பாக விளைவதன் காரணத்தாலே அங்கே தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே 14 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அரசாங்கத்தின் சார்பாக ஒன்று வேண்டும் என்று கேட்பது அவர்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதாக அமையும் என்று நான் கருதுகிறேன். எனவே ஏற்கெனவே இருப்பது ஒழுங்காக நடக்க வேண்டும் என்று சொன்னால் புதிய போட்டிகள் இல்லாமல் இருப்பதே நல்லது என்று கருதுகிறேன். அடுத்து சேலம், தர்மபுரி, பெரியார், கோவை போன்ற இடங்களில் தான் மர வள்ளிக்கிழங்கு மிக அதிகமாக விளைந்து கொண்டிருக்கிறது. இதற்காக மட்டும் கன்னியாகுமரியில் தனியாக ஒரு பேக்டரி ஆரம்பிப்பது என்றால் அது லாபகரமாக, வெற்றிகரமாக இருக்காது என்று நான் கருதுகிறேன். அதனால்தான் சாத்தியக் கூறுகள் இல்லை என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் அம்மாக்குவளை என்று சொல்லக்கூடிய பகுதியில் ஒரு பெரிய கயிறு தொழிற்சாலை இருக்கிறது. அந்த தொழிற் சாலையில் உற்பத்தி ஆகிற பல்வேறுபட்ட பொருள்களை வெளி நாடுகளுக்குக் கூட ஏற்றுமதி செய்கிறார்கள். இன்னும் அதிலே கூடுதலான பிரிவுகள் அமைக்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை வந்திருப்பதாகத் தெரிகிறது. எனவே கூடுதலான பிரிவுகளை அந்தத் தொழிற்சாலையில் அமைப்பதற்கு அரசு ஆணையிடுமா என்று இந்த நேரத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது டயர் தொழிற் சாலை பற்றி என நினைக்கிறேன். இது சம்பந்தமான தகவல் எதுவும் என்னிடத்தில் இல்லை. அது அனேகமாக அவருடைய தொகுதியில் வருவதாக எனக்குத் தெரியவில்லை. அதைப் பார்த்து பிறகு வேண்டுமானால் சொல்கிறேன்.